**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 01.06.2026</u>**

**OS. 82/2024**

**வா.சா.2 திரு.தருமன்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>1 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி நடராஜன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் மைத்துனர் உறவுமுறை. எதற்காக நடராஜன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். சொத்து நடராஜன் சம்பாதித்தாரா என்றால் இல்லை, அவருடைய அப்பா கந்தன் சம்பாதித்த சொத்து. கந்தன் அந்த சொத்தை கிரையம் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த சொத்து எவ்வளவு பரப்பு கொண்டது என்றால் ஒன்றரை ஏக்கர். கந்தனுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர். யார் யார் என்றால் நாராயணன், கந்தன், வேலாயுதம், மற்றொருவர் பெயர் எனக்கு நினைவில்லை. அவர் எல்லாம் உயிருடன் உள்ளார்களா என்றால் அவர்கள் இறந்துவிட்டார்கள்.

2. நடராஜன் கந்தனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கேட்கிறாரா அல்லது நாராயணன் சொத்தை கேட்கிறாரா என்றால் இருவரின் சொத்தையும் சேர்த்துதான் கேட்கிறார். சொத்தை எல்லாம் யார் யார் பண்ணையம் செய்து வருகிறார்கள் என்றால் சென்னம்மாள், சென்னகிருஷ்ணன், நடராஜன், ரங்கநாதன் ஆகியோர். கந்தன், நாராயணன் ஆகியோர் எப்போது இறந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வேலாயுதம் எப்போது இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வேலாயுதத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் அது எனக்கு தெரியாது. நாராயணனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் அது எனக்கு தெரியாது. இன்னொரு சகோதரர் பெயர் தெரியவில்லை என்று சொல்லியுள்ளேன் அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் அது எனக்கு தெரியாது. நாராயணன், வேலாயுதம் ஆகியோருக்கு எல்லாம் வாரிசுகள் உள்ளார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நாராயணன்,

வேலாயுதத்தின் வாரிசு சான்றிதழ் ஒப்படைக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

3. நாராயணன் சொத்துக்களை கந்தனுக்கு தானமாக கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கு உண்டான பட்டா சிட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. கந்தன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் அனைவரும் நன்றாக தான் உள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கின் மற்ற விவரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நடராஜன் எனது மைத்துனர் என்பதால் அவர் கூப்பிட்டதற்காக வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது மைத்துனர் நடராஜன் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.01 15:53:46 +0530